DIVINE LIGHT MINISTRY

# தேவ ஒலியும் ஒளியும்

விலை : ரூ 5 /-
ஆண்டு சந்தா : ரூ 50 /-
ஒளி : 31
கதிர் : 7
மார்ச் : 2020



தேவ ஒலியும், ஒளியும் மார்ச் 2020

## அவர் உங்களுக்கு சொல்வதெல்லாம் செய்யுங்கள்.

யோவான் 2:5



www.divinelightministry.org

## ஆன்ம ஆலோசகர் : அருட்தந்தை S. யேசுதாஸ்

பங்குத் தந்தை, கோவிலூர், தர்மபுரி மறை மாவட்டம்




### புத்தக ஊழியம்

தேவ ஒலியும் ஒளியும் மாத இதழ் சிலருடைய காணிக்கையை கொண்டு பலருக்கு இலவசமாக மாதந்தோறும் புத்தகம் சென்று கொண்டிருக்கிறது. நீங்களும் 10 நபரையாவது வாசகராக்குங்கள்.




### தொலைக்காட்சி ஊழியம்

மாதா தொலைக் காட்சியில் திங்கள் முதல் வியாழன் வரை 4 நாட்கள் மாலை 7.00 to 7.30 "விடுதலையின் நேரம்" என்ற நிகழ்ச்சியில் இறைச் செய்தி கொடுக்கப்பட்டு வருகிறது. ஒரு நாள் இறைச் செய்தி வெளியிட ரூ 7000/ தேவைப்படுகிறது. சிலருடைய தன்னார்வ காணிக்கையாலும், பிறந்தநாள், திருமண நாள்..... மற்றும் குடும்பத்தில் இறந்தோரின் நினைவு நாட்களில் இறைச்செய்தி வெளியிட தரும் காணிக்கையாலும் நடைப்பெறுகின்றது.

### அனுதின இறைவார்த்தை

WhatsAppயில் அனுதின இறைவார்த்தை சென்று கொண்டிருக்கிறது. அனுதின இறைவார்த்தையை காண உங்களுடைய WhatsApp எண்ணை எங்களுக்கு தெரிவியுங்கள்.

தொடர்புக்கு: 9629938814.

### அனுதின இறைச்செய்தி

WhatsAppயில் YouTube வழியாக VOICE OF GOD Selvanathan என்று subscribe செய்து தினமும் தமிழிலும்/ஆங்கிலத்திலும் இறைச் செய்தியை கேட்கலாம்.
மற்றவர்களும் இறைச்செய்தியை கேட்க செயல்படுங்கள்.

**ஊழியங்களுக்காக ஜெபியுங்கள். ஆவியானவர் உணர்த்தும் காணிக்கையால் தாங்குங்கள்.**

### காணிக்கையை

Cheque / DDயை A. SELVANATHAN அல்லது DIVINE LIGHT SOCIETY என்ற பெயரில், MO(Moneyorder)வை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பலாம்.

DIVINE LIGHT MINISTRY, PRAYER HOUSE, LALIGAM (P.O), DHARMAPURI — 636 804.

**DIVINE LIGHT SOCIETY**
A/C NO : 0511073000000624
SOUTH INDIAN BANK
DHARMAPURI
IFSC CODE : SIBIL0000511
MICR CODE : 636059102
SWIFT CODE : SOININ55

வங்கி மற்றும் ONLINE வழியாக அனுப்ப

**A. SELVANATHAN**
A/C NO : 107301000033243
INDIAN OVERSEAS BANK
ODDAPATTI
IFSC CODE : IOBA0001073
MICR CODE : 636020104



# உங்கள் சகோதரனிடமிருந்து....

இயேசு கிறிஸ்துவிற்குள் மிகவும் பிரியமான சகோதரமே !

அருமை ஆண்டவர் இயேசுவின் இனிய தூய திருநாமத்தில் நல்வாழ்த்துக்கள். மீண்டும் இச்செய்தி மலர் வழியாக உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். ஆண்டவர் தந்துள்ள கிருபைக்காக நன்றி கூறுகின்றேன்.

'சாத்தானின் சதி திட்டங்கள்' என்ற செய்தியை தொலை காட்சியிலும், புத்தகத்திலும் வெளியிட்டு இருந்தேன். மக்கள் இறைவார்த்தையை வாசிக்கக் கூடாது, கேட்கக் கூடாது என்று செய்பவன் சாத்தான். அந்த சாத்தான் இறைச்செய்தியை வெளியிடக்கூடாது என்பதில் மிகவும் கருத்தாக உள்ளான். எனவே நற்செய்தி அறிவிப்பதற்கு பல தடைகளை கொண்டு வருகின்றான். கடந்த மாதம் ஒரு வாரம் தொலைக் காட்சியில் இறைச் செய்தி கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. அதேப்போல் **WhatsApp**யில் இறைவார்த்தை செல்லவும் தடை செய்துவிட்டான். தடைகளை நீக்கிப் போடுகின்ற நம் ஆண்டவரிடம் மிகுந்த பாரத்தோடு செபித்து மீண்டும் செயல்படுத்தினோம்.

அன்பானவர்களே ! உங்களுடைய தனிச் செபத்திலும், குழு செபத்திலும் எமது ஊழியங்களுக்காக கருத்தாய் செபியுங்கள். **'விண்ணக வாழ்வை நோக்கி...'** என்ற புத்தகம் தமிழில் 5000 புத்தகமும், ஆங்கிலத்தில் 2000 புத்தகமும் வெளியிட தயாரிப்பு நிலை நடந்துகொண்டிருக்கிறது. அதற்காக பாரத்தோடு செபிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அந்த புத்தகம் மனமாற்றத்திற்கும், ஆண்டவரிடம் வழி நடத்தவும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

மேலும் பிரியமானவர்களே ! **You Tube**யில் **VOICE OF GOD, Selvanathan** என்று **Search** செய்து தமிழிலும், ஆங்கிலத்திலும் இறைச் செய்தியை கேட்கலாம். தினந்தோறும் இறைச்செய்தியை கேட்க **Subscribe** செய்துகொள்ளுங்கள். மற்றவர்களுக்கும் அறிவியுங்கள். இறைச்செய்தி செல்லட்டும் ! இறையாட்சி வளரட்டும் !!

ஆண்டவர் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென் !

**இயேசுவின் நற்செய்தி அறிவிப்பு பணியில் உங்கள் சகோதரன்,**

A. Selvanathan

(A. செல்வநாதன்)


செப தொடர்புக்கு :

**87787 90167, 96299 38814, 99408 35949**

# அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்

இறை இயேசுவில் பிரியமானவர்களே !

அருமை ஆண்டவர் இயேசுவின் இனிய திருநாமத்தில் நல்வாழ்த்துக்கள்.

ஜனவரி 23 ஆம் தேதி விருதாச்சலம் அருகில் உள்ள கோணாங்குப்பம் என்ற கிராமத்திற்கு சென்று இருந்தேன். வீரமா முனிவரால் கட்டப்பட்ட ஆலயம். அங்கு புனித பெரியநாயகி அன்னையின் பக்தர்கள் திரளாக கூடியிருந்தார்கள். அந்த அன்னையிடம் பக்தி விசுவாசத்துடன் மன்றாட்டுக்கள் ஏறெடுக்கப் படுகிறது. பலவித பக்தி முயற்சிகள், அன்னையும் பரிந்துபேசி ஆசீர்வதித்து வருகிறார். பல அற்புதங்களும் நடைப்பெறுகிறது.

பலவித தேவைகளோடும், மன்றாட்டுக்களோடும் வந்த மக்களுக்கு அன்னை பெரியநாயகி கூறிய வார்த்தை 'அவர் (இயேசு) உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்' என்பதாக நான் உணர்ந்தேன். ஏனென்றால் வந்திருந்த மக்கள் ஒருவரிடத்திலும் திருவிவிலியம் இல்லை.

ஆண்டவருடைய அருளையும், ஆசீரையும் பெற்றுக்கொள்ள, நமது தனிப்பட்ட வாழ்க்கையில், குடும்ப வாழ்க்கையில், எதிர்பார்க்கின்ற காரியங்கள் நிறைவேற மற்றும் விண்ணக வாழ்வடைய நமது பாசமிகு அன்னை மரியா நமக்கு சொல்லி தரும் அருமையான பாடம் - 'அவர் உங்களுக்கு சொல்வதெல்லாம் செய்யுங்கள்' என்பதே. நம்முடைய தேவைகள் குறைகள் எல்லாம் நிறைவு பெற ஆண்டவர் இயேசு சொல்வதுபோல் செய்ய வேண்டும்.

கலிலேயாவில் உள்ள கானாவில் திருமணம் ஒன்று நடைப்பெற்றது. இயேசுவின் தாயும் அங்கு இருந்தார். இயேசுவும் அவருடைய சீடரும் அத்திருமணத்திற்கு அழைப்புப்

பெற்றனர். திருமண விழாவில் திராட்சை இரசம் தீர்ந்துபோகவே இயேசுவின் தாய் அவரை நோக்கி, 'திராட்சை இரசம் தீர்ந்து விட்டது' என்றார். இயேசு அவரிடம் 'அம்மா' அதைப்பற்றி நாம் என்ன செய்ய முடியும்? எனது நேரம் இன்னும் வரவில்லையே' என்றார். இயேசுவின் தாய் பணியாளரிடம் "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்' என்றார்.... இயேசு அவர்களிடம் அங்கு இருந்த ஆறு கல் தொட்டிகளில் தண்ணீர் நிரப்புங்கள்' என்று கூறினார். அவர்கள் அவற்றை விளிம்புவரை நிரப்பினார்கள். பின்பு அவர் 'இப்போது மொண்டு பந்திமேற் பார்வையாளரிடம் கொண்டுபோங்கள்' என்று அவர்களிடம் கூறினார். அவர்களும் அவ்வாறே செய்தார்கள். பந்தி மேற்பார்வையாளர் திராட்சை இரசமாய் மாறியிருந்த தண்ணீரைச் சுவைத்தார். இரசத்தை பரிமாறினர். (யோவான் 2:1-10).

மேலே கூறப்பட்ட திருவசனங்களை மனக்கண்முன் வைத்து சிந்தனையுடன் வாசித்துப் பாருங்கள். (1) திருமணத்திற்கு எவ்வளவோ மக்கள் வந்திருந்த போதும் அன்னை மரியாவே இயேசுவிடம் பரிந்து பேசுகிறார். (2) இயேசு 'அம்மா' இன்னும் எனது நேரம் வரவில்லை என்று சொன்னாலும் உடனே அற்புதம் செய்கிறார். (3) இயேசு பணியாளர்களிடம் கூறியது கடினமானது அல்ல.

திருவிவிலியத்தில் சொல்லப்பட்ட அனைத்து வார்த்தை களும் கடவுளுடைய ஆவியால் ஏவப்பட்டு எழுதப்பட்டவை. எனவே திருவிவிலியத்தில் உள்ள எல்லாம் ஆண்டவருடைய வார்த்தைகள், வாக்குகள் (2 பேது 1:20,21). எனவே ஒவ்வொரு நாளும் திருவிவிலியத்தை வாசிக்கும்போது எல்லாம் ஆண்டவராகிய கடவுள் நம்மோடு பேசுகிறார். அவருடைய குரலுக்கு செவிக்கொடுத்து அதன்படி நடக்கின்றபோது நம்முடைய வாழ்க்கை மிகுந்த ஆசீர்வாதமான வாழ்வாக அமையும். இதைக் குறித்து திருவிவிலியத்தில் எவ்வாறு எல்லாம் கூறப்பட்டுள்ளது என்பதில் சிலவற்றை தூய ஆவியின் துணையுடன் சிந்திப்போம்.

## நலம் பெறுவாய் வெற்றி காண்பாய்

இந்தத் திருச்சட்ட நூலை உன் முன்னின்று அகற்றாதே. இரவும் பகலும் இதனைத் தியானம் செய்து இதில் எழுதியுள்ள அனைத்தையும் கடைப்பிடிப்பதில் கவனமாய் இரு. அப்பொழுதுதான் நீ செல்லும் இடம் எல்லாம் நலம் பெறுவாய்; வெற்றி காண்பாய் (யோசுவா 1:8)

மத்திய அரசில் வேலை செய்யும் ஒரு சகோதரன் வட மாநிலத்திற்கு மாற்றம் ஏற்பட்டுவிட்டார். அதனால் அந்த சகோதரனுக்கும் அவர் குடும்பத்தாருக்கும் மிகவும் மனக் குழப்பம், என்ன செய்வதென்று தெரியவில்லை. ஏனெனில் வடமாநிலத்தில் உள்ள இயற்கை சூழ்நிலை மற்றும் அங்குள்ள மக்களின் போக்கு கடினமாக இருக்கும். இதனால் வேலையையே விட்டுவிடலாம் என்ற எண்ணம். வேலையை விட்டுவிட்டால் இதுபோன்று நல்ல சம்பளம் உள்ள மத்திய அரசு வேலை வாங்குவது மிக கடினம். அவர்கள் குடும்பமாக ஆலோசனைக்காக என்னிடம் வந்தார்கள். அவர்களிடம் தம்பி உன்னிடம் பைபிள் இருக்கிறதா ? என்று கேட்டேன். இல்லை என்றார். அதுவே எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. நான் என்னிடம் இருந்த பைபிளை கொடுத்து மேற்க்கண்ட வசனத்தை வாசிக்க சொன்னேன். வசனத்தின் கடைசி பகுதியை வாசித்தபோது அவருடைய உள்ளம் சிந்தனைக்கு உட்பட்டதை அறிந்தேன். மேலும் அடுத்த வசனத்தை வாசிக்க சொன்னேன்.

**நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? வீறுகொள்! துணிந்து நில் ! அஞ்சாதே ! கலங்கிடாதே ! ஏனெனில் உன் கடவுளும் ஆண்டவருமான நான் நீ செல்லும் இடம் எல்லாம் உன்னோடு இருப்பேன் (யோசுவா 1:9).**

இதை வாசித்த உடனே அவருடைய கண்கள் கலங்கியது. அதே சமயம் நான் அவரிடம் சொன்னேன், ஆண்டவர் என்ன கட்டளை கொடுத்தார் – இந்த திருச்சட்ட நூலை உன் முன்னின்று அகற்றாதே. இரவும் பகலும் இதை வாசித்து கடைப்பிடிக்க வேண்டும் என்பது அல்லவா. ஆண்டவருடைய வார்த்தையை வாசித்து அதை கடைபிடிக்கின்றபோது அவருடைய பிள்ளைகளாகிய நம்மோடு இருக்கிறார். நாம் செல்லும் இடமெல்லாம் சர்வ வல்லமையும் கிருபையும் நிறைந்த ஆண்டவர் நம்மோடு இருக்கிறார். அங்குள்ள இயற்கை சூழ்நிலையையோ அல்லது அங்குள்ள மக்களைப் பார்த்தோ பயப்படத் தேவையில்லை. அவரே நமக்க பாதுகாப்பு, அவரே நமக்கு அடைக்கலம். ஏனெனில் ஆண்டவரே உனக்கு முன் செல்பவர். அவர் உன்னைவிட்டு விலகமாட்டார், உன்னைக் கைவிடவும் மாட்டார் (இ.ச. 31:6,8).

மேற்க்கண்ட திருவசனத்தை வாசித்தவுடன் நல்ல தீர்மானத்திற்கு வந்தார். இன்று அந்த சகோதரன் காஷ்மீர் பகுதியில் வேலை செய்கிறார். அவருடைய குடும்பத்தார் மிகவும் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். இன்று அவர்கள் தினமும் திருவிவிலியம் வாசிக்கின்றார்களாம். அதுவே எனக்கு மகிழ்ச்சி. திருவிவிலியத்தில் ஆண்டவருடைய குரலுக்கு செவி சாய்த்தால் அன்னை மரியாவுக்கு மகிழ்ச்சி. அந்த சகோதரன் ஆண்டவரின் ஊழியத்திற்கு என்று நன்றியின் காணிக்கையை அனுப்பி வைக்கிறார்.

இதை வாசித்துக்கொண்டிருக்கின்ற அன்பான சகோதரமே! நாம், நமது சமூகம் பைபிளை எடுக்க வேண்டும். இறைவசனத்தை வாசித்து தியானித்து அதை கடைப்பிடிக்கின்றபோது ஆண்டவருடைய குரலொலிக்கு செவிக்கொடுப்பவர்களாகவும் அவருடைய ஆசீரை பெறுபவர்களாகவும் இருப்போம். இதுவே அன்னை மரியா நமக்கு கற்றுக்கொடுத்த பாடமும், ஆசீருக்கான வழியும்.

## மன்னியுங்கள்; மன்னிப்பு பெறுவீர்கள்

ஆண்டவர் கூறுவது

**'பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்காதீர்கள்; அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்குள்ளாக மாட்டீர்கள். மற்றவர்களைக் கண்டனம் செய்யாதீர்கள்; அப்போதுதான் நீங்களும் கண்டனத்துக்கு ஆளாக மாட்டீர்கள். மன்னியுங்கள்; மன்னிப்புப் பெறுவீர்கள்** (லூக் 6:37).

அன்னை மரியா சொல்கிறார், அவர் உங்களுக்கு சொல்வதெல்லாம் செய்யுங்கள் என்று. அன்னையின் பக்தர்களாகிய நாம் இதை செய்ய முடிகிறதா? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆண்டவர் இயேசு கூறுகிறார் 'நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிபீடத்தில் செலுத்த வரும்போது உங்கள் சகோதரர், சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நிறைவுற்றால், அங்கேயே பலி பீடத்தின்முன் உங்கள் காணிக்கையை வைத்துவிட்டுப் போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக்கொள்ளுங்கள் பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள் (மத் 5:23,24).

எனது ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் ஏறத்தாழ 25 வருடத்திற்கு முன் ஒருமுறை ஒரு கிராமத்து பங்கு ஆலயத்தில் அருட்தந்தை பாவ மன்னிப்பு இறைச் செய்தியை கொடுக்கச் சொன்னார். நான் தூய ஆவியாரின் துணையுடன் ஆண்டவருடைய இறைவார்த்தையை உணர்வு பூர்வமாகவும், அதிகாரமாகவும் கூறினேன். அடுத்தது திருப்பலி நடைப்பெற்றது, திருப்பலியில் மிகச் சிலரே நற்கருணையை பெற்றார்கள். இது மிகவும் வியப்புக்குரியதாக இருந்தது. ஏனென்றால் இறைச் செய்தியில் எவராவது தகுதியற்ற நிலையில் இந்த அப்பத்தை உண்டால் அல்லது ஆண்டவரின் கிண்ணத்தில் பருகினால், அவர் ஆண்டவரின் உடலுக்கும், இரத்தத்திற்கும் எதிராக குற்றம் புரிகிறார் (1 கொரி 11:27) என்பதே. பங்கு தந்தையின் அறிவுரைப்படி அடுத்தநாள் நடைப்பெற்ற நற்செய்தி செபவழிபாட்டில் மக்களிடையே நிறைய சமாதானமும், நட்புறவும் உண்டானது. இது என்னுள்ளத்தில் நீங்கா நினைவு. ஆண்டவருக்கே மகிமையுண்டாகுக.

இன்றைய நாட்களில் நமது சமூகத்தில் என்ன நடந்துக்கொண்டிருக்கிறது. ஆண்டவருக்கு எதிராக குற்றம் புரிகிறவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆண்டவருக்கு எதிராக குற்றம் புரியும்போது எவ்வாறு ஆசீர்வாதம் வரும். தெய்வீகத்திருப்பலியில் நன்மையை அல்ல தீமையைத்தான் பெற்றுக்கொள்கிறோம் – சிந்தியுங்கள்.

பிரியமானவர்களே ! மற்றவர்களை மன்னிக்காமல் நாம் செபித்தால் நம்முடைய செபம் வீணான பயனற்ற செபமாக இருக்கும். ஆண்டவர் இயேசு கற்றுத்தந்த செபத்தில் 'எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளதுபோல எங்கள் குற்றங்களை மன்னியும் (மத் 6:12) என்று செபிக்கின்றோம். மன்னித்துள்ளதுபோல என்பதை மனதில் கொண்டு பாருங்கள். மன்னித்தால் தானே நமது குற்றங்களும் மன்னிக்கப்படும். அப்போதுத்தான் நமது செபம் கேட்கப்படும் ஆண்டவரும் நம்மை ஆசீர்வதிப்பார். எனவேதான் ஆண்டவர் இயேசு கூறுகிறார்;

> **"நீங்கள் வேண்டுதல் செய்ய நிற்கும்போது யார் மேலாவது நீங்கள் மனத்தாங்கல் கொண்டிருந்தால் மன்னித்துவிடுங்கள். அப்போது உங்கள் விண்ணகத் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிப்பார்"** என்று (மாற் 11:25).

ஒரு சகோதரி தன்னுடைய கால் வலிக்காக செபிக்க கேட்டுக் கொண்டார்கள். அவர்களுடைய கால் மடிப்பில் ஒரு கட்டி அதனால் காலை நீட்டவோ மடக்கவோ முடியாமல் மிகவும் கஸ்டப்பட்டார்கள். நான் அவரிடம் யார் மீதாவது மனத்தாங்கல் இருந்தால் மன்னித்துவிடுங்கள். அப்போது ஆண்டவர் உங்கள் குற்றங்களையெல்லாம் மன்னித்து உங்கள் நோய்களையெல்லாம் குணமாக்குவார் (தி.பா. 103:3) என்றேன். அவர் மன்னிக்க மனம் இல்லாமல் வலியோடே திரும்பி சென்றுவிட்டார்கள். இது போன்று மூன்று நான்கு முறை வந்தார்கள். நான் மிகவும் கடிந்து கண்டிப்புடனும் கூறினேன். அவர்கள் வீடு சென்று தன்னுடைய மருமகளிடம் மன்னிப்பு வேண்டி சமாதான வார்த்தையை பேசிக்கொண்டு இருக்கும்போதே காலில் உள்ள கட்டி மறைந்தது. நோய் குணமானது. அல்லேலூயா ! இதை அவர்கள் புத்தகத்தில் சாட்சியாக எழுதி ஆண்டவரை மகிமைப்படுத்தினார்கள். அன்னை மரியா கூறுவது ஆண்டவர் சொல்வதெல்லாம் செய்யுங்கள் நோய்கள் குணமாகும். வியாதி அகன்று போகும். அற்புதங்கள் நடக்கும்.

## கொடுங்கள்; உங்களுக்குக் கொடுக்கப்படும்

ஆண்டவர் கூறுகிறார்

**கொடுங்கள்; உங்களுக்குக் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்** (லூக் 6:38)

இதைக்குறித்து மாதா தொலைக் காட்சியிலும், புத்தகத்திலும் பொருளாதார ஆசீர் என்ற தலைப்பில் இறைச் செய்தி கொடுத்துள்ளேன். மாதா தொலைக்காட்சியின் செய்தியை You Tubeயில் Bro. Selvanathan என்று Search செய்து பார்க்கலாம். அதேப்போல் புத்தகத்தின் செய்தியை www.DivineLightMinistry.org என்ற இணைய தளத்தில் காணலாம்.

கொடுப்பதில் மூன்று முறைகள் உண்டு (1) தசம பாகம் (பத்தில் ஒன்று) இதைக்கொடுக்க வேண்டும் என்பது சட்டம். (2) காணிக்கை – இது தம்முள் தீர்மானித்தபடி கொடுப்பது. (3) முதற்பலன் – இதை காணிக்கையாக்க வேண்டும்.

### தசம பாகம் :

**என் இல்லத்தில் உணவு இருக்கும் பொருட்டுப் பத்திலொரு பங்கு முழுவதையும் கொண்டுவந்து அங்கே களஞ்சியத்தில் சேருங்கள். அதன் பிறகு நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, உங்கள் மேல் ததும்பி வழியுமாறு ஆசி வழங்குகிறேனா இல்லையா எனப் பாருங்கள்** (மலாக் 3:10)

நம்முடைய வருமானத்தில் பத்தில் ஒன்று (தசம பாகம்) ஆண்டவருக் கென்று பிரித்து வைத்து (லேவி 27:30,32) ஆண்டவருக்கென்று அவருடைய ஊழியத்திற்காக கொடுக்கும்போது ஆண்டவர் வானத்தின் பல கணிகளைத் திறந்து ததும்பி வழியுமாறு ஆசீர்வதிக்கிறார்.

ஒருநாள் எமது இறை மன்றாட்டின் வீட்டில் தசம பாகத்தை குறித்து இறைச் செய்தி கொடுத்தேன். அன்றைய வழிபாட்டிற்கு தெருவில் காய்களை விற்கும் ஒரு சகோதரி கலந்துகொண்டார்கள். தெருவில் காய்களை விற்பவருக்கோ மிகவும் குறைந்த வருமானம் தான் வரும். அந்த சகோதரியோ தனது குறைந்த வருமானத்திலும் பத்தில் ஒன்று தினமும் பிரித்து தனியாக வைத்திருந்து இறை மன்றாட்டின் வீட்டில் நடைப்பெறும் நற்செய்தி செபவழிபாட்டிற்கு வந்து நற்செய்தி ஊழியத்திற்காக கொடுப்பார்கள். நானும் ஆண்டவரே உமது வாக்கின்படி

சகோதரியை ஆசீர்வதியுங்கள் என்று செபத்துடன் பெற்றுக்கொள்வேன். அதை நற்செய்தி அறிவிப்புக்காக பயன்படுத்துவேன். ஆண்டவரும் தமது வாக்கின்படி அவர்களை ஆசீர்வதித்தார். காய்கறி கடை பெரியதானது. தற்போது காய்கறி கடைகளுக்கே காய்களை கொடுப்பவரானார். காய்களை பெரிய வண்டியிலும், லாரியிலும் ஏற்றிச்சென்று கொடுக்கக் கூடிய அளவுக்கு ஆண்டவர் அவர்களை ஆசீர்வதித்து உயர்த்திவிட்டார். அல்லேலூயா ! இதுப்போன்று அநேக அநேக சாட்சியங்கள் உண்டு. ஆண்டவரை அவருடைய ஆசீரை அனுபவித்து மகிழ்கின்ற மக்கள் அதிகம்.

**காணிக்கை :**

**ஒவ்வொருவரும் தம்முள் தீர்மானித்தபடியே கொடுக்கட்டும். மன வருத்தத்தோடோ, கட்டாயத்தினாலோ கொடுக்க வேண்டாம். முக மலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர்.**

**கடவுள் உங்களை எல்லா நலன்களாலும் நிரப்ப வல்லவர். எந்தச் சூழ்நிலையிலும் எப்போதும் தேவையானதெல்லாம் உங்களுக்குத் தருவார்; அனைத்து நற்செயல்களையும் செய்வதற்குத் தேவையானதெல்லாம் உங்களுக்கு மிகுதியாகவே தருவார் (2 கொரி 9:7,8).**

இரண்டு ஆண்டுகளுக்கு முன் மாதா தொலைக் காட்சியில் 'பொருளாதார ஆசீர்' என்ற தலைப்பில் இறைச்செய்தி கொடுத்ததை ஒரு சகோதரன் மிக கவனமாக கேட்டிருக்கிறார். உள்ளத்தில் உணர்த்தப் பட்டார். அவர் எங்கள் பகுதியை சேர்ந்தவரும், எனக்கு தெரிந்த நபரும் அவர் மிதிவண்டி (சைக்கிள்) எடுத்துக்கொண்டு கிராமத்து தெருக்களில் சென்று பழைய சாமான்கள் உடைந்து போன சாமான்களை எல்லாம் வாங்கி விற்பவர். கடின உழைப்பும், குறைந்த வருமானமே உண்டு. இறை வார்த்தையால் உணர்த்தப்பட்ட அவர் தனது வீட்டில் ஒரு சிறிய உண்டியலை வாங்கி வைத்து தனக்கு வரும் வருமானத்திலிருந்து சிறிய காணிக்கையை சேமித்து வைத்து ஒரு நாள் என்னிடம் வந்து மாதா தொலைக் காட்சியில் ஒரு நாள் இறைச்செய்தியை வெளியிட வேண்டி உண்டியலை கொடுத்தார்.

அவருக்கு முன்பாக உண்டியலை திறந்து பார்த்தபோது 7,760 ரூபாய் இருந்தது. என் கண்கள் கலங்கியது. இந்த எளிய மனிதருடைய செயலைக் கண்டு என் மனம் ஆண்டவருக்குள் மகிழ்ந்தது. அவருக்கு நான் செபித்தபோது கண்ணீரோடுத்தான் செபித்தேன். சில மாதங்களுக்குப்பின் – அவருடைய மகளுடைய திருமணத்திற்கு அழைக்கப்பட்டிருந்தேன். மிகச்சிறப்பாக நடைப்பெற்றது. நான் அவரிடம் நிறைய செலவு ஆயிருக்கும்போல் தோன்றுகிறது. எதாவது பணத்திற்கு

கஸ்டப்பட்டீரோ என்று கேட்டேன். அவர் "என்ன பிரதர் அப்படி கேட்கின்றீர். நீங்கதானே இறைச்செய்தியில் "அனைத்து நற்செயல் களையும் செய்வதற்குத் தேவையானதெல்லாம் உங்களுக்கு மிகுதியாகவே தருவார்" (2 கொரி 9:8) என்று. அதன்படியே ஆண்டவர் என்னை ஆசீர்வதித்தார் என்றார். நான் மிகவும் வியப்புடனும், மகிழ்ச்சியுடனும் ஆண்டவருக்கு நன்றி கூறினேன். அல்லேலூயா !

## முதற்பலன் :

திருவிவிலியத்தில்

> **உன் செல்வத்தைக் கொண்டு அவரைப்போற்று; உன் விளைச்சல்கள் எல்லாவற்றின் முதற்பலனையும் ஆண்டவருக்குக் காணிக்கையாக்கு.**
>
> **அப்பொழுது உன் களஞ்சியங்கள் நிறைந்திருக்கும்; குடங்களில் திராட்சை இரசம் வழிந்தோடும்** (நீ.மொ. 3:9,10)

எங்கள் பங்கில் ஒரு பெரியவர். ஆலயத்திற்கு வரும்போது எல்லாம் ஏதாவது காணிக்கையை கையில் எடுத்து வருவார். ஒரு நாள் ஒரே ஒரு கோழி முட்டையை காணிக்கைக் கொடுத்தார். அவரிடம் பேசியபோது நேற்று ஒரு கோழி முதல் முறையாக முட்டை போட்டது. அதை ஆண்டவருக்கு செலுத்தனும், மேலும் நாம் வெறுங்கையுடன் ஆண்டவருடைய ஆலயத்திற்கு வரக்கூடாது (வி.ப. 23:15, 34:20). நமது நிலத்தின் முதற்கனிகளில் முதன்மையானவற்றை ஆண்டவருக்கு செலுத்த வேண்டும் (வி.ப. 23:19) என்றார். இப்படி அவர் செய்து வந்ததால் பொருளாதாரத்தில் மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தார். அல்லேலூயா !

இதை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு சகோதரமே ! அன்னை மரியா நமக்கு கற்றுத்தரும் பாடம் அவர் உங்களுக்கு சொல்வதெல்லாம் செய்யுங்கள். திருவிவிலியத்தை வாசித்து அதில் ஆண்டவர் நமக்கு சொல்வதை கடைப்பிடிக்கும் போது மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருப்போம்.

## எல்லாவற்றிலும் ஆசீர்கள்

இணைச்சட்டம் 28 ஆம் அதிகாரம் 1 முதல் 14 திருவசனத்தை வாசித்துப் பாருங்கள். அதன் தலைப்பு : **கீழ்ப்படிதலுக்கான ஆசீர்கள்**

ஆண்டவரின் குரலுக்குச் செவிக்கொடு. நான் இன்று உனக்கு விதிக்கும் அவருடைய கட்டளைகள் அனைத்தையும் கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு. உன் கடவுளாகிய ஆண்டவரின் குரலுக்குச் செவி கொடுத்தால், இந்த ஆசிகளெல்லாம் உன்மேல் வந்து உன்னில் நிலைக்கும் (இ.ச. 28:1,2).

மீண்டும் ஒருமுறை வாசித்துவிட்டு பிறகு கீழே உள்ளதை வாசியுங்கள்.

**உன் கடவுளாகிய ஆண்டவர் உன்னை உயர்த்துவார்.**

**நகரிலும் ஆசி பெற்றிடுவாய்; வயல் வெளியிலும் ஆசி பெற்றிடுவாய்**

**உன் கருவின் கனியும், உன் நிலத்தின் பயனும், உன் கால்நடைகளின் ஈற்றுகளும்... ஆசி பெற்றிடும்.**

**உன் கூடையும் உன் மாவு பிசையும் தொட்டியும் ஆசி பெற்றிடும்.**

**வருகையிலும், செல்கையிலும் ஆசி பெற்றிடுவாய்.**

**உனக்கு எதிராக எழும் உன் பகைவர்கள்... ஏழு வழியாய் உன் கண்களுக்கு முன்னே ஓடிப் போவர்.**

**நீ மேற்கொள்ளும் செயல்கள் அனைத்திலும்... ஆசி பெற்றிடுவாய்.**

**தம் தூய மக்களினமாக நிலை நிறுத்துவார்.**

**அனைவரும் ... உனக்கு அஞ்சுவர்.**

**தக்க காலத்தில் உன் நிலத்திற்கு மழை கொடுக்க ... தம் நன்மைகளின் கருவூலமாகிய வானத்தை திறப்பார்.**

**பல்வேறு இனத்தாருக்கும் கடன் கொடுப்பாய்; நீயோ கடன் வாங்க மாட்டாய்.**

**நீ உயர்வாயேயன்றித் தாழ்ந்து போகமாட்டாய்.**

மீண்டும் ஒருமுறை வாசித்துப் பாருங்கள். எத்தனை ... எத்தனை ஆசீர்கள். எப்படிப்பட்ட ஆசீர்கள். அதுமட்டும் அல்ல, ஆண்டவர் கூறுகிறார் – நீங்கள் என் நியமங்களைக் கவனமாய் கைக்கொண்டு கட்டளைகளை நிறைவேற்றி அவற்றிற்கேற்ப நடந்தால் (லேவி 26:3)

> **என் உறைவிடத்தை உங்கள் நடுவில் நிறுவுவேன். நான் உங்களை வெறுப்பதில்லை. உங்கள் நடுவே நான் உலவுவேன். நானே உங்கள் கடவுள் ! நீங்கள் என் மக்கள்** (லேவி 26:11,12)

இதை வாசித்துக்கொண்டிருக்கின்ற அன்பு சகாதரமே ! நமது அன்பு அன்னை மரியா மிகவும் பாசத்துடன் கூறுவது மகனே ! மகளே ! ஒவ்வொரு நாளும் திருவிவிலியத்தை வாசி. அதன் வழியாக ஆண்டவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள். அப்போது நீங்கள் ஆசீர் வதிக்கப்படுவீர்கள். நீங்கள் ஆசீர்வாதமாக இருப்பதை காணும்போது என்னுள்ளம் மகிழும்.

ஆசீர்வாதத்திற்கு வழி நடத்தும் அன்னையின் அன்பு வார்த்தைக்கு கீழ்ப்படிவோம். ஆண்டவரின் குரலுக்கு செவிக் கொடுப்போம். அவர் சொல்வதெல்லாம் செய்வோம். ஆசீர்பெற்று வாழ்வோம். ஆமென் !

## சிந்தனைக்கு

**திருவிவிலியத்தின் வழியாக ஆண்டவர் பேசும் குரலுக்கு செவி கொடுத்து கீழ்ப்படியவில்லை என்றால் - நமது செபமும் கேட்கப்படுவதில்லை.**

"ஒருவர் திருச்சட்டத்திற்குக் கீழ்ப்படியாதிருப்பாரானால், கடவுளும் அவர் வேண்டுதலை அருவருத்துத் தள்ளுவார்" (நீ.மொ. 28:9).

"அவர்களோ அதற்குச் செவி கொடுக்க மறுத்தார்கள்; இறுகிய மனத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள். தங்கள் காதுகளைப் பொத்திக்கொண்டார்கள்"

படைகளின் ஆண்டவர் தம் ஆவியால் முன்னாளைய இறைவாக்கினர்கள் வாயிலாக அனுப்பித் தந்த திருச்சட்டத்தையும் வாக்குகளையும் கேட்டுவிடாதபடி பாறையைப் போல் தங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக்கொண்டார்கள்;
ஆதலால் படைகளின் ஆண்டவர் கடுஞ்சினமுற்றார்.

நான் கூப்பிட்டபோது அவர்கள் கேளாதிருந்ததுபோல;
ஆவர்கள் கூப்பிட்டபோது நானும் கேட்கவில்லை"
என்கிறார் படைகளின் ஆண்டவர் (செக் 7:11–13).


Statement about ownership and other perticulars about the News Paper **Deva Olium, Olium.**

(To be published in the first issue every year after the last day of February)

**Form V (See Rule 8)**

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | Laligam-636 804, Dharmapuri Dt. |
| 2. Periodocity of its Publication | : | Monthly |
| 3. Printer's Name | : | K. Sakthivel |
| Nationality | : | Indian |
| Address | : | 38-A, P.R.S. St., Dharmapuri-1. |
| 4. Publisher's Name | : | Bro. A. Selvanathan |
| Nationality | : | Indian |
| Address | : | Laligam-636 804, Dharmapuri Dt. |
| 5. Editor's Name | : | Bro. A. Selvanathan |
| Nationality | : | Indian |
| Address | : | Laligam-636 804, Dharmapuri Dt. |

I, Bro. A. Selvanathan, hereby declare that the particulars given above are ture to the best of my knowledge and belief.

**Bro. A. Selvanathan,**
Publisher & Editors.

# செப வீர சேனையாவோம்

எல்லா மக்களும் மீட்பு பெறவும், உண்மையாம் இறை வார்த்தையை அறிந்துணரவும் வேண்டும் என்பது ஆண்டவருடைய திருவுளம் (1 தீமோ 2:4). எனவே ஆண்டவர் நற்செய்தி உலகமெங்கும் எல்லா மக்களுக்கும் அறிவிக்கப்பட வேண்டும் என்றார் (மத் 24:14, மாற்கு 13:10, 16;15). ஆண்டவரால் கொடுக்கப்பட்ட இந்த டிவைன் லைட் ஊழியம் நற்செய்தி அறிவிப்பதே மையமாக கொண்டது. ஆண்டவரே அற்புதமாக வழி நடத்தி வருகிறார்.

தேவ ஒலியும் ஒளியும் என்ற மாத இதழ் வழியாகவும், மாதா தொலைக் காட்சி வழியாகவும் மற்றும் தொலை தொடர்பு ஊடகங்கள் (WhatsApp, You Tube) வழியாக அனுதின இறை வார்த்தையும், அனுதின இறைச்செய்தி தமிழ் மற்றும் ஆங்கிலத்திலும் நற்செய்தி சென்று கொண்டிருக்கிறது.

ஆனால் இதற்கு மறைமுகமாக சில தடைகள் உண்டாகின்றன. தனக்கு சிறிது காலமே என்று அறிந்துள்ள பொல்லாத அலகை கடும் சீற்றத்துடன் செயல்படுகின்றான் (தி.வெ. 12:12). இதை எதிர்த்து போரிட்டு இறையாட்சியை கொண்டுவர செபவீரர்கள் தேவை. தூய ஆவியானவர் தாமே செப வீர சேனையை அமைத்து தருவார்.

## செப பங்காளர்

★ தினமும் தூய ஆவியால் நிரம்பி ஆத்தும பாரத்தோடு 5 நிமிடமாவது செபிப்பேன்.

★ அனுதின செபமாலையில் ஒரு பத்து மணியாவது இந்த ஊழியத்திற்காக செபிப்பேன்.

★ வாரம் / மாதத்தின் ஒருநாள் உபவாசித்து (செபிப்பவர்) இவ்வூழியத்தை மனதிற்கொண்டு செபிப்பேன்.

என்று தூய ஆவியால் உணர்த்தப்பட்டால் செப பங்காளராகலாம்.

## ஊழிய பங்காளர்

(நான் செபிப்பதோடு மட்டும் அல்லாமல்)

★ தேவ ஒலியும் ஒளியும் மாத இதழைப்பற்றி மற்றவர்களுக்கு அறிவிப்பேன். மாதத்திற்கு 10 நபரையாவது வாசகராக்குவேன்.

★ TV,. WhatsApp, You Tubeயில் கொடுக்கப்படும் இறைச்செய்திகளை மக்கள் பார்த்து பயன் பெற, இவ்வூழியம் வளர தூய ஆவியார் உணர்த்துகின்றபடி செயல்படுவேன்.

**மேலும் தொடர்புக்கு : 94437 91800**



# பெண்கள் பகுதி

- சகோதரி. பிலோமினா தேவதாசன்

இயேசு கிறிஸ்துவிற்குள் மிகவும் பிரியமான சகோதரிகளே !

ஆண்டவர் தம் பேரிரக்கத்தினால் நம்மை அரவணைத்து அன்பு செய்யும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தமுள்ள திருநாமத்தில் நல்வாழ்த்துக்கள்.

நாகரீக உலகத்திலே மிகவும் பரபரப்பாய் ஓடிக்கொண்டிருக்கிறோம். தற்கால மகிழ்ச்சிக்காக பலவற்றை தேடி ஓடிக் கொண்டிருக்கிறோம். மகிழ்ச்சி தரும் என்று தேடி செல்லும் பல நிகழ்வுகள் நமக்கு துன்பத்தையும், துக்கத்தையும், வேதனையையும் உண்டு பண்ணுவதாகவே இருக்கிறது.


ஆகவே இந்த வாழ்க்கை சூழ்நிலையிலே நாம் தேடுகின்ற வழிகள் நம் ஆண்டவர் நமக்கு தந்த வாழ்க்கைக்கு நேரிய வழிகளா என்று சிந்திக்க வேண்டும். இதைப்பற்றித்தான் ஆண்டவர் மத் 7:13, 14–ல் 'இடுக்கமான வாயிலின் வழியே நுழையுங்கள். ஏனெனில் அழிவுக்கு செல்லும் வாயில் அகன்றது. வழியும் விரிவானது. அதன் வழியே செல்வோர் பலர். வாழ்வுக்கு செல்லும் வாயில் மிகவும் இடுக்கமானது, வழியும் மிக குறுகலானது, இதைக் கண்டுபிடிப்போர் சிலலே என்று கூறுகின்றார்.

நோவாவின் காலத்தில் பார்க்கும்போது பனி மட்டுமே பெய்யும். மழை என்பது அந்த காலத்தில் கேள்விப்படார்த ஒன்று. அப்போது 40 நாட்கள் மழை பெய்யும், பெரும் வெள்ளம் ஏற்பட்டு பேரழிவு ஏற்படும். அதனால் பேழை ஒன்றை செய் என்று ஆண்டவர் சொல்கிறார். நோவாவுக்கு மழை, பேழை என்பது பற்றியும் அறியாது இருந்தார். ஆனால் கடவுளின் மேல் அவர் வைத்த விசுவாசத்தினால் அவர் தமக்கு கூறியபடியே பேழை ஒன்றை செய்ய ஆயத்தமானார். அவர் நீதிமானாய் இருந்த காரணத்தால் கடவுள் அவரை தேர்ந்தெடுத்தார். ஆண்டவர் தந்த அளவுகளின்படியாக பேழையை உருவாக்கினார்.

நோவா பேழையை உருவாக்கும்போதும், அநேக மக்கள் அதை பார்த்திருப்பார்கள். நோவாவும் ஆண்டவர் தமக்கு கூறிய மழையைப் பற்றியும் பெரும் வெள்ளத்தை பற்றியும் கூறியிருப்பார். ஆனால் யாரும் அவர் வார்த்தையை கேட்காமல் அவரை கேலி, கிண்டல் செய்திருப்பர். அவர் வார்த்தையை கேட்காமல் அழிவுக்குள்ளானார்கள். ஆனால் நோவா ஆண்டவரை மட்டுமே நம்பி அவர் சொன்னபடி பேழையின் வாயிலை அமைத்து அதற்குள் தம் குடும்பத்தாரும், பறவையினங்களும், விலங்குகளும் நுழைந்தார்கள். மீண்டுமாய் உலகத்திற்கு பிரவேசித்தார்கள்.

நாமும்கூட நம்முடைய வாழ்க்கையிலே எத்தனையோ பிரச்சினைகள், போராட்டங்கள் இருப்பினும் உலகம் நம்மை இகழ்ந்தாலும் ஆண்டவருடைய வார்த்தையை கேட்டு, அந்த வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அவருக்கு உகந்த நேரிய வழியில் நடக்கும்போது மறு உலகத்திற்கு பிரவேசிப்போம். மனம்போன போக்கில் உலக ஆசாபாசங்களுக்கு ஆட்பட்டு நவ நாகரீக, ஆடம்பரமான வாழ்க்கை, அழிவுக்குரிய வழியில் நடப்போமானால் அழிவு நிச்சயம்.

எனவே நம் வழிகளை ஆண்டவருக்கு ஒப்புவித்து அவர் வழியில் நடப்போமானால் ஆண்டவர் இம்மையிலும், மறுமையிலும் நம்மை ஆசீர்வதிப்பார். ஆண்டவரை மட்டுமே தேடுவோம், நேரிய வழியில் செல்வோம். விண்ணக வாழ்வை நோக்கி நமது பயணம் இருக்கட்டும். அதற்காக செபிப்போம்.




# தேவ ஒலியும் ஒளியும்

ஆண்டவர் இந்த புத்தக ஊழியத்தை தரும்போது எந்த விலையோ, சந்தாவோ குறிப்பிட வேண்டாம். யாரிடமும் பணம் கேட்கவும் வேண்டாம். நானே மக்கள் உள்ளத்தில் பேசி கொடுக்கச் செய்வேன் என்றார் (அரசாங்க ஆணைக்காக புத்தகத்திற்கு விலை/சந்தா குறிப்பிடப்பட்டுள்ளது) சிலருடைய காணிக்கையால் பலருக்கு இலவசமாக புத்தகம் சென்றுகொண்டிருக்கிறது. இவ்வூழியத்தை தாங்கும் நல்ல உள்ளங்களுக்காக உபவாசித்து செபிக்க கடமைப்பட்டுள்ளோம்.

**தூய ஆவியானவரால் உணர்த்தப்பட்டு தனி நபராகவோ, குழுவாகவோ 1000 புத்தகங்களோ அல்லது அதற்குமேலோ வெளியிட காணிக்கையால் தாங்க விருப்பம் உள்ளவர்கள் தங்கள் காணிக்கையோடு தங்கள் செபக்கருத்துக்களை எங்களுக்கு தெரிவியுங்கள்.**

**தொடர்புக்கு : 88700 01089, 94891 48720**

## மார்ச் மாதம்

| வெளியிடும் புத்தகம் | காணிக்கையால் தாங்குபவர் | உபவாசித்து செபிக்கும் நாள் |
|---|---|---|
| 1000 | **ஜார்ஜ் கில்பர்ட்**, கிருஷ்ணகிரி.<br>குடும்பத்தினரின் ஆன்ம சரீர நலனுக்காகவும், மூத்த மகனுக்கு விரைவில் வேலை கிடைக்கவும். | 6-3-2020<br>வெள்ளி |
| 1000 | **லில்லி தேவதாஸ் குழுவினர்**, ஒசூர்.<br>குடும்பங்களில் சந்தோசம், சமாதானம் நிகழவும் அவர்களுடைய தேவைகள் சந்திக்கபடவும், ஆன்ம சரீர நலனுக்காகவும். | 13-3-2020<br>வெள்ளி |
| 1000 | **மரியா**<br>குடும்ப ஆசீருக்காக | 20-3-2020<br>வெள்ளி |

# செபியுங்கள்

அன்பு ஆண்டவரே ! உம்மை போற்றுகிறோம், புகழுகிறோம், ஆராதிக்கின்றோம். 'அறிவிப்பதைக் கேட்டால்தான் அதைக் கேட்க வாய்ப்புண்டு' (உரோ 10:17) என்பதை மனதில்கொண்டு இந்த புத்தகத்தின் வழியாக இறைச்செய்தி வெளியிட காணிக்கையால் தாங்கிய நபர்களையும், குழுவினர்களையும் ஆசீர்வதியும். அவர்களுடைய எண்ணங்களும், தேவைகளும் நிறைவேறவும் என்றும் உமது ஆசீரால் நலம் பெற்று வாழ்ந்திருக்க கிருபை செய்யும். அன்பு அன்னையே தூய மரியே இவர்களுக்காக பரிந்து பேசும். ஆமென் !




# மாதா தொலைக்காட்சி

மாதா தொலைக்காட்சியில் 'விடுதலையின் நேரம்' நிகழ்ச்சியில் ஒருநாள் இறைச்செய்தி வெளியிட ரூ. 7000/- தேவைப்படுகிறது. இதற்காக செபியுங்கள். ஆண்டவர் உங்கள் உள்ளத்தில் உணர்த்தினால் உதவுங்கள். ஆண்டவருடைய குரலொலிக்கு கீழ்ப்படிவதாலும் (இ.ச. 28:1) அநேகருடைய செபங்களாலும் நீங்கள் ஆசீரைப் பெறுவீர்கள்.

## இறைச் செய்தி வெளியிட உதவுபவர்களுக்கு:

**DIVINE LIGHT SOCIETY,**
A/C No. 0511073000000624
SOUTH INDIAN BANK,
DHARMAPURI.
IFSC : SIBL0000511 MICR CODE : 636059102
SWIFT CODE : SOININ55

**A. SELVANATHAN**
A/C No. 107301000033243
INDIAN OVERSEAS BANK,
ODDAPATTI.
IFSC IOBA 0001073
MICR CODE 636020104

**காணிக்கை அனுப்பிய பின் SMS வழியாக தெரியப்படுத்தவும்.**

## மார்ச் மாத விடுதலையின் நேரம்

| இறைச் செய்தி | நாள் | வெளியிட உதவியவர்கள் |
|---|---|---|
| **முதல் வாரம்** | | |
| குணமாக்கும் ஆண்டவர் | 02–03–2020 திங்கள் | **பால்ராஜ்,** ஆசிரியர், கிருஷ்ணகிரி. குடும்ப ஆசீர்/ பிள்ளைகளின் படிப்பு |
| | 03–03–2020 செவ்வாய் | **சகாயராஜ்,** கோவிலூர். குடும்ப ஆசீருக்காக |
| இறையரசு | 04–03–2020 புதன் | **ஷீலா ராபர்ட்,** நெல்லிமரத்துப்பட்டி. குடும்ப /தொழில் ஆசீருக்காக |
| | 05–03–2020 வியாழன் | **MARIA** குடும்ப ஆசீருக்காக |
| **இரண்டாம் வாரம்** | | |
| ஆலயமும் பலி பீடமும் | 09–03–2020 திங்கள் | **ஜெனிட்டா மேரி,** கந்திகுப்பம். பிறந்த நாள் ஆசீருக்காக |
| | 10–03–2020 செவ்வாய் | **DEEPAN J.** குடும்ப ஆசீருக்காக |

| | | |
|---|---|---|
| கிறிஸ்துவ வாழ்வில் போராட்டம் | 11–03–2020 புதன் | **RELTON, Bangalore.** குடும்ப ஆசீருக்காக |
| | 12–03–2020 வியாழன் | **RELTON, Bangalore.** குடும்ப ஆசீருக்காக |

## 3-வது வாரம்

| | | |
|---|---|---|
| இரக்கத்தின் ஆண்டவர் | 16–03–2020 திங்கள் | **யோகலட்சுமி,** செங்கல்பட்டு. குடும்ப ஆசீருக்காக |
| | 17–03–2020 செவ்வாய் | **S. RAJU, Rajasthan.** குடும்ப ஆசீருக்காக |
| தாழ்ச்சியின் மேன்மை | 18–03–2020 புதன் | **அமலசெல்வம்,** திருப்பத்தூர். குடும்ப ஆசீருக்காக |
| | 19–03–2020 வியாழன் | **பெயர் வெளியிட விரும்பாதவர்** குடும்ப ஆசீருக்காக |

## 4-வது வாரம்


| | | |
|---|---|---|
| கடவுளின் அன்பு | 23–03–2020 திங்கள் | **ஜெரால்டு யூ கிறிஸ்டி மகிமைநாதன் வின்சென்ட்** (உடல் நலம்) மற்றும் குடும்ப ஆசீருக்காக |
| | 24–03–2020 செவ்வாய் | **சுனிதா** குடும்ப ஆசீருக்காக |
| வார்த்தையே வாழ்வு | 25–03–2020 புதன் | **ராபர்ட்,** ஒட்டப்பட்டி. ஆண்டவர் செய்த நன்மைக்கு நன்றியாக |
| | 26–03–2020 வியாழன் | **ஜேம்ஸ் லத்தீஸ்,** சென்னத்தூர். ஆண்டவர் செய்த நன்மைக்கு நன்றியாக |

## 5-வது வாரம்

| | | |
|---|---|---|
| சிலுவையில் ஏழு வார்த்தைகள் | 30–03–2020 திங்கள் | **விக்டர்,** கிருஷ்ணகிரி. தொழில் ஆசீருக்காக |
| | 31–03–2020 செவ்வாய் | **இருதய மேரி** குடும்ப ஆசீருக்காக |



**செபியுங்கள்** அன்பு ஆண்டவரே ! இறையரசைப்பற்றிய நற்செய்தி எல்லா இனத்தாருக்கும் எல்லா மக்களுக்கும் உலகமெங்கும் அறிவிக்கப்பட வேண்டும் (மத் 24:14). எல்லா மக்களும் மீட்பு பெறவும் உண்மையாம் இறை வார்த்தையை அறிந்து உணர வேண்டும் என்று விரும்புகின்ற (1 தீமோ 2:4) தெய்வமே ! உமது தெய்வீகத் திருவுளத்தை நிறைவேற்ற பண உதவி செய்த நபர்களையும், அவர் குடும்பத்தையும் ஆசிர்வதியும். அவர்கள் உடலிலும், உள்ளத்திலும் ஆன்மாவிலும் உமது ஆசிரைப்பெற்று எல்லாவற்றிலும் நலம் பெற்று இருப்பார்களாக. ஓ அன்பு அன்னையே புனித மாதாவே இவர்களுக்காக பரிந்து பேசும். ஆமென் !



# இயேசு அருளிய அற்புத சாட்சிகள்

'கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் ... ஏனெனில் கேட்போர் எல்லாரும் பெற்றுக் கொள்கின்றனர்' (மத் 7:7) என்று ஆண்டவர் இயேசு கூறியுள்ளார். மேலும் 'நீங்கள் என் பெயரால் எதைக் கேட்டாலும் செய்வேன்' (யோவான் 14:14) என்ற இயேசுவை நோக்கி மன்றாடும் யாவருக்கும் அவர் அளவற்ற நலன்களைப் பொழிகிறார் (உரோம 10:12).

## குழந்தை பாக்கியம் தந்தார்

எனக்கு திருமணமாகி 5½ ஆண்டுகள் ஆனது. ஆனால் குழந்தை பாக்கியம் இல்லை. எவ்வளவோ மருத்துவ முறையை பயன்படுத்தினேன், குழந்தை பாக்கியம் இல்லை. ஒரு அருட்சகோதரி, சகோதரருடைய Cell Noஐ கொடுத்து பேச சொன்னார்கள் (மாதா TVயில் வருபவர்தான் என்று அறிமுகப் படுத்தினார்.) நான் சகோதரரிடம் போனில் பேசியபோது அவர் கேட்ட முதல் கேள்வி – "நீங்கள் பைபிளை தினமும் படிப்பீர்களா ?" என்று. நான் இல்லை என்றேன். அவர் சொன்ன அறிவுரை என்னுடைய உள்ளத்தை குத்தியதோடு மட்டும் அல்ல. திருச்சபையையும் என் மனகண்முன் கொண்டுவந்து சிந்திக்க வைத்தது. M.Phil படித்துள்ள நான் பைபிளை படிக்காததை குறித்து மனம் வருந்தினேன். சகோதரரின் அறிவுரைப்படி எசாயா 66:9–வது திருவசனத்தை வாசித்து செபத்துடன் வயிற்றின் மீது சிலுவை அடையாளம் வரைந்து செபித்து வந்தேன். 3 ஆம் மாதமே கருவுற்றேன். அதன்பின் செபத்திலும், விவிலியம் வாசிப்பதிலும் ஆர்வம் செலுத்தினேன். ஆண்டவர் நல்ல ஒரு ஆண் குழந்தையை தந்து ஆசீர்வதித்தார். அல்லேலூயா !

**பேறு காலத்தை ஏற்படுத்திய நான் மகப்பேற்றைத் தடை செய்வேனா? என்கிறார் ஆண்டவர். மகப்பேற்றுக்குக் காரணமான நான் கருப்பையை அடைத்துவிடுவேனா? என்கிறார் உங்கள் கடவுள் (எசாயா 66:9).**

**அருணா விஜயகுமார்**, கன்னியாகுமரி.

## அற்புத சுகம்

எனது நெருங்கிய உறவினர் ஒருவருக்கு திடீரென்று மாரடைப்பு வந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று கேள்விப்பட்டு பார்க்க சென்றோம். போகும்போது சகோதரருக்கு போன் செய்து செபிக்க கேட்டுக் கொண்டோம். அவர், 'பயப்படாதீர்கள், தெய்வீக மருத்துவரான இயேசு மரித்து உயிர்த்து வாழ்கிறார். அற்புதம் செய்வார்' என்றார். நானும் விடாது செபித்துக் கொண்டிருந்தேன். 2 ஹார்ட்டுமே 90%க்கு மேல் அடைப்பு உள்ளது. பிழைப்பது கடினம் என்று Doctor சொன்னார்கள். நான் விசுவாசத்தோடு செபமாலை முடிப்பதற்குள் 1 Side Heart ஆப்ரேஷன் செய்து நல்லபடியாக வெளியே வந்தார். மீண்டும் இன்னொரு Heart–ம் ஆப்ரேஷன் உடனே செய்ய வேண்டும் என்றார்கள். என் மகன் Andrew Arun முதலில் சோகத்தூர் உள்ளிருப்பு தியானத்தில் கலந்துகொள்ளுங்கள். அதன்பிறகு Test செய்யுங்கள் என்றான். அதன்படியே 1 வார தியானத்தில் கலந்துகொண்டார்கள். பிறகு Scan செய்து பார்த்ததில் அடைப்பு எதுவும் இல்லை என்று சொல்லிவிட்டர்கள். அற்புத சுகம் தந்த இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!! மரியே வாழ்க!!!

**லிஸி சுரேஷ்**, பசுபதிபாளையம்.

## சுகப் பிரசவம்

எனக்கு திருமணமாகி 3 ½ வருடமாகிறது. முதல் வருடம் கரு உண்டாகி 3–வது மாதம் கரு கலைந்து அபார்ஷன் ஆகிவிட்டது. 2 வருடம் கழித்து மீண்டும் கருவுற்றேன். அதுவும் அபார்ஷன் ஆகிவிட்டது. மூன்றாம் முறை கருவுற்றபோது சகோதரருக்கு போன் செய்து என் நிலையை கூறினேன். இந்த முறையாவது எனக்கு குழந்தை உண்டாக வேண்டும் என்று செபிக்க கேட்டுக் கொண்டேன். சகோதரர் எசாயா 66:7 வசனத்தை எடுத்து வாசி என்றார். நானும் எடுத்து வாசித்தேன்.

**வேதனை வருமுன்னே சீயோன் பிள்ளை பெற்றாள் !**

**பிரசவ நேரம் நெருங்குமுன்னே ஆண் மகவை ஈன்றாள் !**

இதை வாசித்தபோது ஆனந்தத்தில் என் கண்கள் கலங்கியது. Brother ஆமென் என்று சொல்ல சொன்னார். நானும் 'ஆமென்' என்றேன். அதன்படியே ஆண்டவர் நல்லதொரு ஆண் குழந்தையை தமது வாக்கின்படியே கொடுத்து ஆசீர்வதித்தார். வாக்கு மாறாத ஆண்டவருக்கு கோடான கோடி ஸ்தோத்திரம், துதி கன மகிமையும். அல்லேலூயா ! ஆமென். **பிரியா ஸ்டான்லி,** கோவை.

## பொருத்தனை செபத்தை ஆண்டவர் கேட்டார்

சகோதரர் மாதா TV வழியாக வெளியிடும் இறைச்செய்தியை தவறாமல் பார்த்து வருகிறேன். மற்றும் அவர் வெளியிடும் தேவ ஒலியும் ஒளியும் என்ற இறைச் செய்தியின் மாத இதழை வாசித்தும் வருகின்றேன். என் வீட்டின் பக்கத்தில் எங்க அப்பாவின் நிலம் விற்க முடியாமல் தடையாக இருந்தது. இந்த நிலம் விற்றால் பத்தில் ஒரு பாகம் சகோதரரின் நற்செய்தி ஊழியத்திற்காக கொடுப்பேன் என்று தூய ஆவியால் உணர்த்தப்பட்டு பொருத்தனையோடு செபித்துக்கொண்டேன். ஆண்டவர் என் பொருத்தனை செபத்தை கேட்டருளினார். ஆண்டவர் அற்புதமாக அந்த நிலத்தை விற்கச் செய்தார்.

**இதோ! ஆண்டவருடைய மக்கள் அனைவரின் முன்னிலையில் அவருக்கு என் பொருத்தனைகளை நிறைவேற்றுவேன்** (தி.பா. 116:14)

பொருத்தனையின் செபத்தை கேட்டருளின ஆண்டவருக்கு நன்றி!

**அந்தோனி லீலா,** காட்பாடி.

## நல்ல வேலையை தந்தார்

நான் படித்துவிட்டு வேலையில்லாமல் இருந்தேன். பல முயற்சிகள் எடுத்தும் தோல்விதான். இந்நிலையில் என்னுடைய வீட்டில் இருந்த பழைய தேவ ஒலியும் ஒளியும் புத்தகங்களை எடுத்து அடுக்கிக்கொண்டிருந்தபோது ஒரு புத்தகத்தில் கொடுக்கப்பட்ட சாட்சியத்தை படித்தேன். என்னைப் போன்று படித்துவிட்டு வேலையில்லாத சகோதரர், 'ஆண்டவருடைய ஊழியமாக VOICE OF GOD Selvanathan என்பதை You Tubeயில் 100 பேருக்கு Subscribe செய்து கொடுத்தாராம். 100வது முடியும்போது அவருக்கு நல்ல வேலை கிடைத்ததாம். இது என் உள்ளத்திலும் உணர்வை கொண்டு வந்தது. நான் 53 பேருக்கு Subscribe செய்யும் போதே நல்ல வேலை கிடைத்தது. அல்லேலூயா! இயேசுவுக்கே புகழ் ! மரியே வாழ்க. **JANE MARY, Chennai.**

## தருமபுரி, சோகத்தூர் கார்மேல் தியான ஆசிரமத்தின் 2020 மார்ச் மாத நிகழ்வுகள்

1-3-2020 ஞாயிறு (மாலை 5-00 to 9-00 மணி வரை) ஆண்டிமடம்.

2, 3-3-2020 திங்கள், செவ்வாய் (மாலை 7-00 to 10-00) மலாட், மும்பை.

5, 6, 7-3-2020 வியாழன், வெள்ளி, சனி (மாலை 6-00 to 9-00) ரெட்டியார் பாளையம்.

6, 7, 8-3-2020 வெள்ளி, சனி, ஞாயிறு (மாலை 6-00 to 9-00) ஆரோக்கிய மாதா ஆலயம், வடுகர்பேட்டை.

9-3-2020 திங்கள் to 13-3-2020 வெள்ளி } **பொது நிலையினர் தியானம்**

13,14,15-3-2020 வெள்ளி, சனி, ஞாயிறு (மாலை 6-00 to 9-00) மேட்டுப்பாளையம்.

14-3-2020 2-வது சனி (காலை 9-00 to மாலை 5-00 மணி வரை) **பகல் செபவழிபாடு,** கார்மேல் தியான ஆசிரமம், சோகத்தூர்.

17, 18, 19-3-2020 செவ்வாய், புதன், வியாழன் (மாலை 6 to 9) அரியமலம்.

20, 21, 22-3-2020 வெள்ளி, சனி, ஞாயிறு (மாலை 4-00 to 10-00) லூர்து மாதா திருத்தலம், பாண்டி.

22-3-2020, 4-வது ஞாயிறு (மாலை 5-00 to இரவு 9-00 மணி வரை) சைதாப்பேட்டை, சின்னமலை-சென்னை.

23-3-2020 திங்கள் to 27-3-2020 வெள்ளி } **பொது நிலையினர் தியானம்**

27-3-2020, 4-வது வெள்ளி (இரவு 9-00 to காலை 5-00 மணி வரை) **முழு இரவு செப வழிபாடு,** கார்மேல் தியான ஆசிரமம், சோகத்தூர்.

27, 28, 29-3-2020 வெள்ளி, சனி, ஞாயிறு வெள்ளி (மாலை 6-00 to 9-00) புனித சவேரியார் ஆலயம், மையிலாடுதுறை.

* உள்ளிருப்பு தியானத்திற்கு முன்பதிவு அவசியம்.

**தொடர்புக்கு :**

**98650 05534, 98946 07494**

## சகோதரரின் இறை மன்றாட்டின் வீடு, இலளிகத்தில்

### விடுதலையின் செபவழிபாடு

நாள் : 07-03-2020, முதல் சனிக்கிழமை

நேரம் : காலை 10-00 மணி முதல் 2-00 மணி வரை

(திருப்பலியுடன் நிறைவு பெறும்)

### செப வீரர்கள் கூடுகை

நாள் : 21-03-2020, 3-வது சனிக்கிழமை

நேரம் : காலை 10-00 மணி முதல் 2-00 மணி வரை

**EDITOR & PUBLISHER :**

**A. SELVANATHAN,**

Prayer House, Laligam (Po.), Dharmapuri Dist.

Printer : K. SAKTHIVEL, Arun Printers, Dharmapuri-1.



# இந்திய மற்றும் உலகச் செய்திகள்



- ஒரே நாளில் 78 ஆயிரத்து 500 பி.எஸ்.என்.எல். ஊழியர்கள் விருப்ப ஓய்வு பெற்றனர். அவர்களுக்கு ரூ. 70 ஆயிரம் கோடி பணப் பலன்கள் கிடைக்கும்.
- சீனாவில் தோன்றிய கொரோனா வைரஸ் நோய் விஸ்வரூபம் எடுத்து வருவதால், அந்த நாட்டுக்கு சென்று வந்தவர்களுக்கு அமெரிக்காவில் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது.
- தான்சானியாவில் கிறிஸ்தவ பிரார்த்தனை கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டதில் 20 பேர் பரிதாபமாக பலியாகினர்.
- இலங்கை சுதந்திர தின விழாவில் பங்கேற்று பேசிய அந்த நாட்டின் அதிபர் கோத்தபய ராஜ பக்சே பயங்கரவாத அமைப்புகளை தலை தூக்க விட மாட்டோம் என கூறினார்.
- கொரோனா வைரசை கட்டுப்படுத்த சீனாவுடன் அமெரிக்கா இணைந்து செயல்படும் என ஜனாதிப்தி டிரம்ப் தெரிவித்துள்ளார்.
- அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் மீதான பதவி நீக்க தீர்மானம் செனட்சபையில் தோல்வி அடைந்ததால் அவரது பதவி தப்பியது.
- இந்திய விமானப்படைக்கு 200 போர் விமானங்கள் வாங்கப்படுவதாக பாதுகாப்புத் துறைச் செயலாளர் அஜய்குமார் தெரிவித்தார்.
- பாகிஸ்தான் முன்னாள் அதிபர் முஷரப்புக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை லாகூர் ஐகோர்ட்டு ரத்து செய்தது.
- துருக்கியில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாகின. இடிபாடுகளில் சிக்கி 22 பேர் பலியாகினர்.
- இந்தியா வந்த பிரேசில் அதிபர் ஜெயிர் போல்சனரோ டெல்லியில் பிரதமர் மோடியை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது இரு நாடுகளுக்கும் இடையே 15 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.
- ஆப்கானிஸ்தானில் தலீபான்களின் பிடியில் இருந்த ராணுவ அதிகாரிகள் 62 பேர் சிறையை உடைத்து மீட்கப்பட்டனர்.
- டெல்லியில் 1350 எம்.பி.களுக்கு இருக்கை வசதியுடன் முக்கோண வடிவத்தில் நாடாளுமன்றத்துக்குப் புதிய கட்டிடம் கட்டுவதற்கான மாதிரி வரைபடம் தயாரானது.
- கொரோனோ வைரஸ் தாக்குதல் விவகாரத்தில் சீனாவுக்கு உதவ இந்தியா தயாராக இருப்பதாக ஜின்பிங்குக்கு பிரதமர் மோடி கடிதம் எழுதி உள்ளார்.
- தாய்லாந்து வணிக வளாகத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் பலியானோர் எண்ணிக்கை 27 ஆக உயர்ந்தது. 17 மணி நேர போராட்டத்திற்கு பின் கொலையாளியை போலீசார் சுட்டுக் கொன்றனர்.

# எமது ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்

## புத்தக ஊழியம்

தேவ ஒலியும் ஒளியும் என்ற மாத இதழ் வெளியிடப்படுகிறது. புத்தகத்தில் வெளியிடும் இறைச் செய்திகளை **WWW. DIVINELIGHTMINISTRY.ORG** என்ற இணையதளத்தில் காணலாம்.

## தொலைக்காட்சி ஊழியம்

மாதா **TV** யில் திங்கள் முதல் வியாழன் வரை மாலை 7.00 to 7.30 'விடுதலை நேரம்' என்ற நிகழ்ச்சியில் இறைச்செய்தி கொடுக்கப்படுகிறது. விடுதலையின் நேரம் நிகழ்ச்சியில் வெளியிடும் இறைச் செய்திகளை YouTube ல் Bro. A.Selvanathan என்று search செய்து காணலாம்.

## அனுதின இறைவார்த்தை

**WhatsApp** யில் அனுதின இறைவார்த்தை சென்று கொண்டிருக்கிறது.

இறைவார்த்தையை facebook divine selvanathan யில் காணலாம்.

## அனுதின இறைச்செய்தி

**YouTube, WhatsApp** யில் அனுதினமும் இறைச்செய்தி தமிழிலும் ஆங்கிலத்திலும் கொடுக்கப்பட்டு வருகிறது.

YouTube VOICE OF GOD Selvanathan என்று Subscribe செய்து தினமும் இறைச்செய்தியை கேளுங்கள்.

## ஜெப ஊழியம்

| | |
|---|---|
| ஜெப பங்காளராக | 944 37 91 800 |
| ஜெப தேவைக்கு | 944 37 91 800, 877 87 90 167<br>962 99 38 814 |

NEWS PAPER REGD.No. TNTAM/2000/313
Registered News Paper No. DPI/01/2018 - 2020
Licensed to Post Without Payment Under
License Registered No. TN/WR/DPI/01/WPP/2018 - 2020
POSTED ON 1,2 EVERY MONTH
POSTED AT LALIGAM S.O 636 804

# இறை மன்றாட்டின் வீடு


## இலளிகம்



பாவத்திலிருந்து, நோயிலிருந்து, பிசாசின் பிடியிலிருந்து, கவலை கண்ணீரிலிருந்தும் விடுதலை பெற.

### விடுதலையின் செபவழிபாடு

நாள் :
**07-03-2020**, முதல் சனி
( ஒவ்வொரு மாதமும் முதல் சனி )



நேரம் :
காலை 10:00 மணி
முதல் மதியம் 2:00 வரை

இறைவார்த்தையில் விடுதலை
யோவான் 8:32

இயேசுவில் விடுதலை
யோவான் 8:36

தூய ஆவியில் விடுதலை
2 கொரி 3:17

திருப்பலியுடன் நிறைவு பெறும்

எல்லா மக்களும் மீட்பு பெறவும், திருச்சபையில் மறுமலர்ச்சியும் எழுப்புதல் உண்டாகவும் இறையரசு வளரவும்

### செப நண்பர்கள் கூடுகை

நாள் : **21-03-2020**,
**3 - வது சனி**



நேரம் :
காலை 10:00 மணி
முதல் மதியம் 1:00 வரை

தொடர்புக்கு **96299 38814, 87787 90167**

குறிப்பு: சேலம் to தர்மபுரி செல்லும் வழியில் நல்லம்பள்ளியில் இருந்து கிழக்கே 5 கிலோ மீட்டர் தூரத்தில் இலளிகம் உள்ளது. டவுன் பஸ்களும் ஷேர் ஆட்டோக்களும் உண்டு



அருண் ஆப்செட் தருமபுரி, 7708428888

**DIVINE LIGHT MINISTRY**
PRAYER HOUSE
LALIGAM (P.O), DHARMAPURI (D.T) - 636 804
Cell: 96299 38814, 87787 90167, 99408 35949
bro.selvam@gmail.com